RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI:10.34256/irjt22418

# திருமால் வழிபாட்டில் பரிபாடலும் சிலப்பதிகாரமும்

ம. சின்னதுரை [அ, *]

[அ] தமிழாய்வுத்துறை, ஸ்ரீ மத் ஆண்டவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருச்சி-620005, தமிழ்நாடு, இந்தியா

# Paripaadal and Silappathikaram in the Worship of Thirumal

**M. Chinnadurai [a, *]**

[a] Department of Tamil, Srimad Andavan Arts and Science College, Trichy-620005, Tamil Nadu, India

* Corresponding Author: chinnaduraim.phil@gmail.com

Received: 09-04-2022
Revised: 02-08-2022
Accepted: 28-08-2022
Published: 12-10-2022

Check for updates

**ABSTRACT**

There is a worldwide practice of referring to Tamil as the language of Bhakti. The history of Tamil literature shows that devotional subject matter is more prevalent in Tamil literature. Human beings want their actions to be fulfilled. They feel that it requires not only their own energy but also the grace of God. They worship God for that. At the same time, those who say that devotion is the love of God to attain salvation. In the literature, it is seen that the devotees worship the Lord at various levels in the devotional system. In such modes of worship, information about Thirumal is available in Paripaadal and Silappathikaram. Therefore, the purpose of this article is to examine how the worship of Thirumal is found in Paripaadal and Silapathikaram.

**Keywords:** Paripaadal, Silapathikaram, Worship, Devotees

## முன்னுரை

உலகளவில் தமிழ் மொழியை பக்தி மொழி என்று கூறும் வழக்கம் உள்ளது.தமிழ் இலக்கியங்களில் பக்திப் பொருண்மையே அதிக அளவில் இடம்பெற்றுள்ளதை தமிழ் இலக்கிய வரலாறு வழி அறியமுடிகிறது. மாந்தர்கள் தாம் மேற்கொள்ளும் செயல்கள் இனிது நிறைவேற வேண்டும் என விரும்புவர். அதற்குத் தன் ஆற்றல் மட்டும் போதாது, இறையருளும் வேண்டும் எனக் கருதுவர். அதற்காக இறைவனை வழிபடுவர். அதே நேரத்தில் பேரின்பமாகிய வீடுபேற்றை அடைய இறைவன்மீது கொள்ளும் பேரன்பே பக்தியாகும் என ஆன்றோர் விளக்குவர். அப்பக்தி நெறியில் இறைவனைப் பல நிலைகளில் பக்தர்கள் வழிபடும் முறைகளை இலக்கியங்களில் காணமுடிகிறது. இத்தகைய வழிபாட்டு முறைகளில் திருமால் பற்றிய செய்திகள் பரிபாடலிலும் சிலப்பதிகாரத்திலும் நிரம்பக் கிடைக்கின்றன. எனவே திருமால் வழிபாடு பரிபாடலிலும் சிலப்பதிகாரத்திலும் எவ்வகையில் அமைந்துள்ளது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## மாயோனாகிய திருமால்

திருமால் வழிபாடு தமிழர்களின் பண்டைய வழிபாடுகளில் ஒன்றாகும். வைணவ சமயத்தின் தனிப்பெருந் தெய்வமாகத் திருமால் போற்றப்படுகிறார். திருமாலுக்கு மாயோன் என்ற பெயரும் உண்டு. தொல்காப்பியம் திணைகளைப் பற்றி வரையறுக்கும் போது,

"மாயோன் மேய காடுறை உலகமும்"

எனக் கூறுகிறது (Ilampooranar, 2005).

எனவே தொல்காப்பியர் காலத்தில் காடும் காடு சார்ந்த முல்லை நிலத்தின் தெய்வமாகத் திருமால் வழிபடப் பட்டமையை அறிய முடிகிறது. அதற்குப் பிறகு சங்க இலக்கியங்களான தொகை நூல்களிலும் பாட்டு நூல்களிலும் திருமால் பற்றிய குறிப்புகள் அறியக் கிடக்கின்றன. பின்னர் சிலப்பதிகாரம் முதலிய காப்பியங்களில் திருமால் பற்றிய செய்திகளும் வழிபாட்டு முறைகளும் காணப்படுகின்றன. இடைக்காலத்தில் ஆழ்வார்கள் பாடிய நாலாயிரத் திவ்விய பிரபந்தம் முழுக்க முழுக்க திருமாலைப் போற்றும் பக்திப் பனுவல்கள் ஆகும். சிற்றிலக்கியங்கள் பல திருமாலைப் போற்றி எழுந்துள்ளன என்பதை இலக்கிய வரலாற்றில் நாம் காண முடிகிறது. தற்காலத்தில் பாரதி முதல் கண்ணதாசன் வரை பல கவிஞர்கள் கண்ணனாகிய திருமாலைப் போற்றிப் பாடியுள்ளனர் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

## திருமாலின் வடிவழகு

திருமாலின் வடிவழகைப் பற்றி பரிபாடலும் சிலப்பதிகாரமும் சிறப்பாக எடுத்துரைத் துள்ளன. திருமால் அழகிய கரிய மேனியை உடையவன், செந்தாமரை மலர்போன்ற கண்களை உடையவன் என்பதை,

"எரிமலர் சினைஇய கண்ணை

பூவை விரிமலர் புரையும் மேனியை"

"நின்னது திகழொளி சிறப்பிருள் திருமணி

கண்ணே, புகழ்சால் தாமரை யலரிணைப் பிணையல்"

"மணிதிகழ் உருவின் மாஅ யோயே"

"திருமணி திரையாடவிந்த முந்நீர்

வருமழை யிருஞ்சூழ் மூன்றும் புரையு மாமெய்"

"நின்னின் தோன்றிய நிரையிதழ்த் தாமரை

அன்ன நாட்டத்து அளப்பரி யவை!"

"கார்மலர் பூவை கடலை இருள்மணி

அவையைந்தும் உறழும் அணிகிளர் மேனியை"

"புவ்வத் தாமரை புனையுங் கண்ணன்

வெளவற் காரிருள் மயங்குமணி மேனியன்"

என்ற அடிகள் விளக்கி நிற்கின்றன (Puliyur Kesigan, 2010). மேற்கண்ட பரிபாடலின் பாடலடிகள் திருமாலின் மேனி காயாம்பூ போலவும் நீலமணி போலவும் கடல் நீர் போலவும் மழை மேகம் போலவும் காரிருள் போலவும் அழகிய கரிய நிறம் உடையது என்பதை உணர்த்துகின்றன. மேலும் அவன் கண்கள் சிவந்த கண்கள் எனவும் அவை செந்தாமரை மலரை ஒத்தன எனவும் எடுத்துரைக்கின்றன.

திருமாலின் கோயிலைக் குறித்து சிலப்பதிகாரம் உரைக்கையில் அவன் நீலமேனி உடையவன் என்பதை,

"நீலமேனி நெடியோன் கோயிலும்"

எனக் கூறுகிறது (Puliyur Kesigan, 2004). கோவலனும் கண்ணகியும் புகார் நகரத்தை விட்டு கிளம்பும்போது அழகுடன் விளங்கும் ஆதிசேடனாகிய பாம்பணையின் மேல் அறிதுயிலும் மணிவண்ணனான திருமாலின் கோயிலை வலஞ்செய்து நீங்கினர் என்பதை,

"அணிகிளர் அரவின் அறிதுயில் அமர்ந்த

மணிவண்ணன் கோட்டம் வலம்செயாக் கழிந்து"

என்ற அடிகளால் சிலப்பதிகாரம் சுட்டுகின்றது (Puliyur Kesigan, 2004). திருமாலின் கண்கள் திருவடி கைகள் திருவாய் ஆகியவை சிவந்தவை என்பதையும், அவன் மேனி கரியது என்பதையும் சிலப்பதிகாரம்,

"கண்ணும்

திருவடியும் கையும் திருவாயும் செய்ய

கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே?

கண்ணிமைத்துக் காண்பார் தம் கண்ணென்ன கண்ணே?"

என்ற அடிகள் மூலம் குறிப்பிடுவதைக் காணமுடிகிறது.

திருமால் கரிய நிறம் உடையவன் என்பதைக் கூறும்,

"அஞ்சன உருவன்" (Puliyur Kesigan, 2012)

"உருவுகரிய ஒளி மணிவண்ணன்"

என்ற பெரியாழ்வாரின் பாசுர அடியும் இங்குக் கருதத்தக்கன (Seenivasan, 2000).

## அவதாரச் செய்திகள்

திருமால் பல அவதாரங்கள் எடுத்து இருப்பினும் அவற்றில் பத்து அவதாரங்களைச் சிறப்பாகக் குறித்து, "தசாவதாரங்கள்"என்று கூறும் வழக்கம் உள்ளது. அவை மச்சம், கூர்மம், வராகம், நரசிம்மம், வாமனன், பரசுராமன், இராமன், பலராமன், கண்ணன், கல்கி என்பனவாகும். "அவதாரம் என்ற சொல்லுக்கு மேலிருந்து இறங்கி வருதல் என்பது பொருள். 'அவதாரம்' ஒரு நிலையில் தீயோர்களை அழித்து நல்லோர்களைக் காத்தற்காக இறைவன் மேற்கொண்டதாகக் 'கீதை' போன்ற நூல்கள் கூறினும் வைணவக் கோட்பாட்டின்படி ஆன்மாக்களுக்கு அருளவே மேற்கொண்டதாகக் கூறுவர்." திருமாலின் பத்து அவதாரங்களில் நரசிம்ம அவதாரம், வாமன அவதாரம், பலராம அவதாரம், கண்ணன் அவதாரம் ஆகியவை குறித்து பரிபாடலும் சிலப்பதிகாரமும் பெருமளவில் பேசுகின்றன (Arunachalam, 2002).

## நரசிம்ம அவதாரம்

உலக உயிர்களைக் காத்தல் பொருட்டும் பிரகலாதனுக்கு அருளுதல் பொருட்டும் இரணியனை அழிக்க திருமால் எடுத்த அவதாரம் நரசிம்ம அவதாரமாகும். இதனை,

"நிற்புகழப்

புகைந்த நெஞ்சின் புலர்ந்த சாந்தின்

பிருங்க லாதன் பலபல பிணிபட

வெடிபடா ஒடிதூண் தடியொடு

தடிதடி பலபட வகிர் வாய்த்த உகிரினை"

என்ற அடிகள் மூலம் அறிய முடிகிறது (Puliyur Kesigan, 2010). மேலும் திருமால் நரசிம்ம அவதாரம் எடுத்த போது பல்லாயிரம் கைகளைக் கொண்டிருந்தார் என புராணங்கள் கூறுகின்றன. பரிபாடலிலும் திருமாலைக் குறித்துக் கூறும்போது,

"ஆயிரம் விரித்தகைம் மாய மள்ள!

பதினா யிரங்கை முதுமொழி முதல்வ!

நூறாயிரங் கைஆறறி கடவுள்!

அனைத்தும் அல்ல பல அடுக்கல் ஆம்பல்

இனைத்தென எண் வரம்பு அறியா யாக்கையை!"

எனக் கூறுகிறது. இதிலிருந்து திருமால் பல்லாயிரம் கைகளைக் கொண்டிருப்பவன் என்றும் இவை முடிந்த முடிவு அல்ல, இவ்வளவினது என எண்ணி அறிந்து எல்லை அறியப்படாதது என்பதும் விளங்குகிறது. இப்பாடலடிகள் நரசிம்ம அவதாரத்தைக் குறிப்பதாகக் கொள்ளலாம் (Puliyur Kesigan, 2010). இங்கு,

"எத்துணை போதுங் கையென் றியம்பினா லெண்ணற் கேற்ற

வித்தக ருளரே அந்தத் தானவர் விரிந்த சேனை"

என்ற கம்பராமாயண அடிகளும் கருதத்தக்கது (Gopala Krishanmachiriyar, 2006). சிலப்பதிகாரத்தில் நரசிங்கத்தினைக் குறிக்கும் போது,

"மடங்கலாய்! மாறட்டாய்! மாயமோ? மருட்கைத்தே!"

என்ற அடி இடம்பெறுகிறது. இதில் நரசிங்கமாகி பகையை அழித்தவனே என்று இவ்வவதாரம் அமையப் பெற்றுள்ளது (Puliyur Kesigan, 2004).

## வாமன அவதாரம்

திருமால் குறளனாக உருவெடுத்து மாபலிச் சக்கரவர்த்தியிடம் சென்று மூவடி நிலம் பெற்று உலகை இரண்டடியால் அளந்த அவதாரம் வாமன அவதாரமாகும். இவ்வாமன அவதாரம் குறித்து பரிபாடலில்,

"கீழேழ் உலகமும் உற்ற அடியினை!"

"திணிநிலம் கடந்த க்கால் திரிந்த யர்ந்து அகன்றோடி

நின்னஞ்சிக் கடற் பாய்ந்த பிணிநெகிழ்பு அவிழ்தண்தார்

அன்னவர் படஅல்லா அவுணர்க்கும் முதல்வன் நீ"

என்ற அடிகள் இடம்பெற்றுள்ளமையைக் காண முடிகிறது. சிலப்பதிகாரத்தில் மதுரைக்குச் செல்லும் வழிகளைப் பற்றி மாடல மறையோன் கூறியபின் தான் நெடிய உலகத்தை அளந்த திருமாலின் பாதங்களை வணங்குவதற்கு செல்கிறேன் எனக் கூறுகிறான் (Puliyur Kesigan, 2010). இதனை,

"நீள்நிலம் கடந்த நெடுமுடி அண்ணல்

தாள்தொழு தகையேன் போகுவல் யான்என"

என்ற அடிகள் மூலம் அறியலாம் (Puliyur Kesigan, 2004).

"மூவுலகும் ஈரடியான் முறைநிரம்பா வகைமுடியத்

தாவியசே வடிசேப்பத்"

என்ற ஆய்ச்சியர் குரவை அடிகளும் திருமால் வாமனனாக அவதரித்து உலகளந்த செய்தியைக் கூறுகின்றது (Puliyur Kesigan, 2004). இங்கு

"இருநிலம் கடந்த திருமறு மார்பின்

முந்நீர் வண்ணன் பிறங்கடை" (Gowmaareeswari, 2009)

என்ற அடிகளும்,

"ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி"

என்ற அடியும் எண்ணத்தக்கன (Seenivasan, 2000).

## பலராம அவதாரம்

திருமால் எடுத்த அவதாரங்களில் பலராம அவதாரமும் ஒன்று. இதனை ஆதிசேடனின் அவதாரம் எனவும் கூறுவர். ஆனால் ஆதிசேடனுக்குள்ளாகவும் திருமாலாகிய பரம்பொருள் உறைந்திருப்பதால் இதனைத் திருமாலின் அம்சாவதாரம் என வைணவர்கள் குறிப்பிடுவர். கண்ணபிரானுக்கு மூத்தவராக பலராமன் கூறப்படுகிறார். எனவே 'நம்பி மூத்தபிரான்' என அவரை அழைப்பதுண்டு. பரிபாடலில் பலராமனைத் திருமாலாகக் காணும் மரபைக் காணமுடிகிறது. இதனை,

"ஆயிரம் விரித்த அணங்குடை அருந்தலை

தீயுமிழ் திறனொடு முடிமிசை அணவர

மாயுடை மலர்மார்பின் மையில்வால் வளைமேனிச்

சேயுயர் பணைமிசை எழில்வேழம் ஏந்திய

வாய்விளங்கும் வளைநாஞ்சில் ஒருகுழை ஒருவனை"

"நீயே வளையொடு புரையும் வாலியோற் கவன்

இளையன் என்போர்க்கு இளையை யாதலும்"

"விறன்மிகு வலியொலி பொலிபுகழ் புழுதியின்

திறனுழு வளைவாய் நாஞ்சி லோனும்"

என்ற அடிகள் உணர்த்துகின்றன (Puliyur Kesigan, 2010).

சிலப்பதிகாரம் பலராமனின் கோயிலைக் குறித்துக் கூறுகையில்,

"வால்வளை மேனி வாலியோன் கோயிலும்" (Puliyur Kesigan, 2004)

என்றும்

"மேழிவலன் உயர்த்த வெள்ளை நகரமும்"

என்று கூறுவதைக் காண முடிகிறது (Puliyur Kesigan, 2004). மேலும் ஆய்ச்சியர் குரவையில் பலராமனைக் கூறுமிடத்து,

"மதிபுரையும் நறு மேனித் தம்முனோன்"

எனக்கூறி, பலராமனை ஆயர்கள் வழிபட்டதை இளங்கோவடிகள் குறித்துள்ளார் (Puliyur Kesigan, 2004).

"செம்பொற் கழலடிச் செல்வா! பலதேவா!

உம்பியும் நீயும் உறங்கேலோ ரெம்பாவாய்"

என்ற அடியும் இங்குக் கருதற்பாலது (Seenivasan, 2000).

## கண்ணன் அவதாரம்

திருமால் உலக உயிர்களைக் காக்கவும் கம்சனைக் கொல்வதற்காகவும் எடுத்த அவதாரம் கண்ணன் அவதாரம் ஆகும். இக்கண்ணனைப் பற்றி பரிபாடல்,

"செங்கண் காரி!" (Puliyur Kesigan, 2004)

என்றும் அவன் குடக்கூத்து ஆடியதையும் மாடுகள் மேய்த்ததையும்

"இடவல! குடவல! கோவல! காவல!"

என்றும் சுட்டுகிறது (Puliyur Kesigan, 2010). சிலப்பதிகாரத்தில் மாதவியின் பதினொரு வகையான ஆடல்களைக் கூறவந்த இளங்கோவடிகள், திருமால் ஆடிய ஆடலைக் குறிக்கும்போது,

"கஞ்சன் வஞ்சம் கடத்தற்காக

அஞ்சன வண்ணன் ஆடிய ஆடலுள்

அல்லியத் தொகுதியும்"

என கம்சனுடைய வஞ்சனையை வெல்வதன் பொருட்டு அஞ்சன வண்ணனாகிய கண்ணன் ஆடிய அல்லியத் தொகுதி எனக் கூறுகிறார் (Puliyur Kesigan, 2004). இதிலிருந்து கண்ணன் அவதாரச்செய்தி சிலப்பதிகாரத்தில் இடம்பெறுவதை அறிய முடிகிறது. மேலும் ஆய்ச்சியர் குரவை,

"கன்று குனிலா கனி உதிர்த்த மாயவன்"

"கொல்லையம் சாரல் குருந்தொசித்த மாயவன்"

"மடந்தாழும் நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்

கடந்தானை நூற்றுவர் பால் நாற்றிசையும் போற்றப்

படர்ந்தா ரணம்முழங்கப் பஞ்சவர்க்குத் தூது

நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே?

நாராயணா! என்னா நாவென்ன நாவே?"

என்ற அடிகளால் பெருமளவில் கண்ணன் அவதாரச் செய்திகளை இயம்பக் காணலாம் (Puliyur Kesigan, 2004).

## தொன்மக் கூறுகள்

தொன்மம் என்பது பழைமையைக் குறிக்கும். இதனை,

"தொன்மை தானே சொல்லுங் காலை

உரையொடு புணர்ந்த பழைமை மேற்றே"

என்பர் தொல்காப்பியர். இத்தொன்மை குறித்து கூறும்போது,"ஒருவிதமான கவிதை மொழியே தொன்மை என்பாரும் உளர். தொகுத்துக் கூறினால்,"தொன்மை அல்லது மித்து (Myth) என்பது காலத்தால் பழமையானது. கருத்தால் சமயச் சார்புடையது" என்பர் (Tamizhannal, 2002).

திருமால் கருடக் கொடியை உடையவன், சங்கு சக்கரத்தோடு விளங்குபவன், ஆதிசேடன் மீது பள்ளி கொண்டிருப்பவன், பாற்கடலில் அமுதம் கடைந்து அதை அமரர்களுக்கு வழங்கியவன், அவனே வராக அவதாரம் எடுத்து பூமியைக் காத்தவன், இராமனாகப் பிறந்து இராவணனை அழித்தவன் முதலிய புராண, இதிகாசக் கருத்துக்களான தொன்மக் கூறுகள் பரிபாடல், சிலப்பதிகாரத்தில் நிரம்பக் காணப்படுகின்றன.

## கருடக்கொடி

திருமால் கருடனை வாகனமாகவும் கொடியாகவும் உடையவன் என்பதை,

"ஆயிர அணர்தலை அரவுவாய்க் கொண்ட

சேவல் ஊர்தியும்"

"செவ்வா யுவணத் துயர் கொடி யோயே!" (Puliyur Kesigan, 2010)

என்ற பரிபாடல் அடிகளாலும்

"உவணச் சேவல் உயர்த்தோன் நியமமும்"

"புள்ளூர்க் கடவுளைப் போற்றுதும் போற்றுதும்"

என்ற சிலப்பதிகார அடிகளாலும் அறியமுடிகிறது (Puliyur Kesigan, 2004).

## அமுதம் வழங்குதல்

பாற்கடலைக் கடைந்து அமுதத்தைத் தேவர்களுக்கு வழங்கியவன் திருமால் என்பதை,

"வாயடை அமிர்தம் நின் மனத்தகத்து அடைதர

மூவா மரபும் ஓவா நோன்மையும்

சாவா மரபின் அமரர்க்காகச் சென்ற நின்

மரபினோய்" (Puliyur Kesigan, 2010)

என்ற பரிபாடல் அடிகளும்,

"வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கி

கடல்வண்ணன் பண்டொருநாள் கடல் வயிறு கலக்கினையே"

என்ற சிலப்பதிகார அடிகளும் எடுத்துக்காட்டுகின்றன (Puliyur Kesigan, 2004).

## வராக,இராம அவதாரச் செய்திகள்

திருமால் வராக அவதாரம் எடுத்து பூவுலகைக் காத்ததை பரிபாடலும், அவன் இராம அவதாரம் எடுத்த செய்தியை சிலப்பதிகாரமும் விளக்குகின்றன.

"ஊழி ஆழிக்கண் இருநிலம் உருகெழு

கேழலாய் மருப்பின் உழுதோய்" (Puliyur Kesigan, 2010)

என பரிபாடல் அடிகளில் வராக அவதாரக் குறிப்பும்,

"தாதை ஏவலின் மாதுடன் போகிக்

காதலி நீங்கக் கடுந்துயர் உழந்தோன்

வேத முதல்வற் பயந்தோன் என்பது

நீஅறிந்தி லையோ? நெடுமொழி அன்றோ!"

"தாவிய சேவடி சேப்பத் தம்பியொடும் கான் போந்து

சோ அரணும் போர் மடியத் தொல்லிலங்கை கட்டழித்த

சேவகன்சீர் கேளாத செவி என்ன செவியே?

திருமால் சீர் கேளாத செவி என்ன செவியே?"

என்ற சிலப்பதிகார அடிகளில் இராமாயணச் செய்தியும் இடம்பெறுவதைக் காண முடிகிறது (Puliyur Kesigan, 2004).

## திருமால் திருமகளோடு விளங்குதல்

திருமால் ஆதிசேடனாகிய பாம்பணையில் சங்கு சக்கரத்தைத் தன் இரு கைகளில் ஏந்தியும் தன் மார்பில் திருமகளைத் தாங்கியும் காட்சியளிக்கும் செய்தியை பரிபாடல் சிலப்பதிகாரம் ஆகிய நூல்களிலும் காணமுடிகிறது.

"ஆயிரம் விரித்த அணங்குடை அருந்தலை

தீயுமிழ் திறனொடு முடிமிசை அணவர

மாயுடை மலர் மார்பின் மையில்"

என ஆதிசேடனாகிய பாம்பணை குறித்தும்

"திருஞெபிர்ந்து அமர்ந்த மார்பினை"

"செய்யோள் சேர்ந்தநின் மாசில் அகலம்"

என திருமகள் மார்பில் உறைதலைக் குறித்தும்

"பருவம் வாய்த்தலின் இருவிசும் பணிந்த

இருவேறு மண்டிலத் திலக்கம் போல

நேமியும் வளையும் ஏந்திய கையாற்

கருவி மின்னவிர் இலங்கும் பொலம்பூண்"

என சங்கு,சக்கரத்தைக் கையில் கொண்டிருப்பதைக் குறித்தும் பரிபாடல் எடுத்துரைக்கிறது (Puliyur Kesigan, 2010).

"நீல மேகம் நெடும் பொற் குன்றத்துப்

பால் விரித்து அகலாது படிந்தது போல

ஆயிரம் விரித்து எழுதலை உடை அருந்திறல்

பாயற் பள்ளிப் பலர் தொழுது ஏத்த

விரிதிரைக் காவிரி வியன்பெருந் துருத்தித்

திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும்

நன்னிற மேகம் நின்றது போலப்

பகையணங்கு அழியும் பால்வெண் சங்கமும்

தகை பெறு தாமரைக் கையின் ஏந்தி

நலங்கிளர் ஆரம் மார்பிற் பூண்டு

பொலம்பூ ஆடையின் பொலிந்து தோன்றிய

செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்"

எனத் திருமால் திருவரங்கத்தில் அரவணையில் பள்ளி கொண்டிருத்தலையும் மார்பில் திருமகளைக் கொண்டிருத்தலையும் திருவேங்கடத்தில் சங்கு, சக்கரத்தைத் தாங்கி நின்ற கோலத்தில் காட்சியளிப்பதையும் சிலப்பதிகாரம் எடுத்தியம்புகிறது (Puliyur Kesigan, 2004).

## முடிவுரை

திருமாலின் வடிவழகு, அவனது அவதார சிறப்புகள், புராண, இதிகாசச் செய்திகளான தொன்மக் கூறுகள், ஆதிசேடனோடு,சங்கு சக்கரதாரியாக திருமகளோடு காட்சியளிக்கும் நிலை ஆகியவற்றை ஏற்றுப் போற்றி பரிபாடல், சிலப்பதிகாரம் ஆகிய இரு நூல்களும் விளங்குவதை அறிய முடிகிறது.

## References


Arunachalam, P.(2002) Bhakthi Ilakkiyam, Mulai Nilaiyam, Chennai, India.

Gopala Krishanmachiriyar, V.M. (2006) Kambaramayanam - Sundarakandam, Uma Publication, Chennai, India.

Gowmaareesvwari, S. (2009) Perumpanarrupadai Sirupanarrupadai, Saratha Pathippagam, Chennai, India.

Ilampooranar, (2005) Tholkappiyam Porulathikaram, Saratha Pathipagam, Chennai, India.

Puliyur Kesigan, (2004) Silapathikaram, Paari Nilaiyam, Chennai, India.

Puliyur Kesigan, (2010) Paaripadal Moolamum Uraiyum, Gangai Puthaga Nilaiyam, Chennai, India.

Puliyur Kesigan, (2012) Purananuru, Pari Nilaiyam, Chennai, India.

Seenivasan, M. (2000) Naalayira Divya Prabandham, Srivaraki Press, Chennai, India.

Tamizhannal, (2002) Oppilakkiya arimugam, Koviloor Madalayam, Koviloor, India.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License